சார்பு நீதிமன்றம், அருப்புக்கோட்டை.
வழக்கு எண் :OS:115/2020

2023ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22ம் நாள் வாதி சாட்சியின் வாக்குமூலம் (1889ம் ஆண்டு சாட்சியச் சட்டம் எண். 44வது பிரிவு 5வது விதியின் ஏற்பாட்டின்படி) திருமதி.எஸ்.பேச்சியம்மாள் கிரேடு 2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியப் பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர் ராதாகிருஷ்ணன் (PW1) | தொழில் |
| தந்தை/கணவர் பெயர் | சமயம் |
| கிராமம் | சாதி |
| தாலுகா | வயது |

**முதல் விசாரணை**

22.11.2023

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். என்னுடைய சாட்சியத்தை பிரமாணவாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். இதைப்படித்து பார்த்து கையெழுத்து செய்துள்ளேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். தாவா A செடியூலில் கண்ட 1 முதல் 5 லக்க சொத்துக்கள் கணினி பட்டா மின்பதிவிறக்க நகல் வா.சா.ஆ.1 ஆகும். தாவா A செடியூலில் கண்ட 6 முதல் 13 லக்க சொத்துக்கள் கணினி பட்டா மின்பதிவிறக்க நகல் வா.சா.ஆ.2 ஆகும். தாவா B செடியூல் சொத்துக்கள் கணினி பட்டா மின்பதிவிறக்க நகல் வா.சா.ஆ.3 ஆகும். 11.08.2002 தேதியிட்ட ஆறுமுகதேவரின் இறப்பு சான்றிதழ் அசல் வா.சா.ஆ.4 ஆகும். 02.02.2016 தேதியிட்ட 3ம் பிரதிவாதி 4, 5 பிரதிவாதிகளுக்கு எழுதிக்கொடுத்த இனாம்செட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.5 ஆகும். தாவா சொத்துக்களுக்குரிய இனாம்செட்டில்மெண்ட் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகும். 22.06.2020 தேதியிட்ட வாதி வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் வா.சா.ஆ.7 ஆகும். 26.06.2020 தேதியிட்ட 1, 2, 3 பிரதிவாதி

வழக்கறிஞர் அனுப்பிய பதில் அறிவிப்பு அசல் வா.சா.ஆ.8 ஆகும். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

குறுக்கு விசாரணைக்காக ஒத்திவைக்கப்படுகிறது.